Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. இரா. சுந்தரம்

நக.எண் : 29/2024 நாள் : 19.02.2024

பொருள் : மனைப்பிரிவு-சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சி- சூளேஸ்வரன்பட்டி கிராமம் - க.ச. எண் 19-B1Bல் 1.55 ஏக்கர் அல்லது 6275.00 சதுர மீட்டர் பரப்பளவில் கோவை மாவட்டம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் உத்திரவின்படி மனைகளாக பிரித்து தொழில் நுட்ப அனுமதி வழங்கியது - இறுதி அங்கீகாரம் வழங்குதல் - தொடர்பாக

பார்வை : 1. திருமதி.தாரணி மற்றும் மூவர், க..எண்55/33, ரத்தின வினாயகர் கோவில் வீதி, வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி அஞ்சல் கோயம்புத்தூர் மாவட்டம் என்பவரின் விண்ணப்பம் நாள் 10.01.2024

2. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019

3. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், கோவை அவர்களின் கடிதம் நக.எண் CBEREGN/2UPS7QYK/2023/2024/TCP நாள் 12.01.2024

4. சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சி மன்ற தீர்மான எண் 09/2024 நாள் 29.01.2024

உத்திரவு

சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட சூளேஸ்வரன்பட்டி கிராமம் க.ச. எண் 19-B1Bல் 1.55 ஏக்கர் அல்லது 6275.00 சதுர மீட்டர் நிலப்பரப்பில் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் ; கோவை அவர்களின் கடிதம் நக.எண் CBEREGN/2UPS7QYK/2023/2024/TCP நாள் 12.01.2024 மற்றும் ம.வ./கோ.மா.எண் 06/2024 நாள் 12.01.2024 (இணையவழி)ன்படி 25 மனைகளாக பிரித்து அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து பார்வை 1ல் கண்டுள்ள கடிதத்துடன் மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் உள்ள விபரங்கள் அனைத்தும் உண்மை மற்றும் முறையாக பேணப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு கீழ்காணும் விண்ணப்பதாரர் உட்படுத்தப்படுகிறார்.

திருமதி.தாரணி மற்றும் மூவர்,
க..எண்55/33, ரத்தின வினாயகர் கோவில் வீதி, வெங்கடேசா காலனி,
பொள்ளாச்சி அஞ்சல் கோயம்புத்தூர் மாவட்டம்

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் , கோவை அவர்களது இத்துடன் இணைக்கப்பட்ட கடிதம் ந.க.எண் CBEREGN-2UPS7QYK/2023/2024/TCP நாள் 12.01.2024 மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். இதில் ஏதேனும் தன்னிச்சையாக மாற்றமோ , திருத்தமோ, அங்கீகரிக்கப்பட்ட மனைகள் விபரம், பொது ஒதுக்கீடுகள் சாலைகள், கடைகள் ஆகியவற்றில் ஏற்ற தாழ்வுகளோ வித்தியாசமோ காணப்படின் மனைப்பிரிவு அங்கீகாரம் உடனடியாக இரத்து செய்யப்படும். ஷ மனைப்பிரிவில் குடிநீர் வசதி மற்றும் வடிகால் வசதி முறையாக தமது சொந்தப் பொறுப்பில் மேற்கொள்ளப் பட வேண்டும். தங்களால் மனைப்பிரிவில் கிரயம் மேற்கொண்டதில் 50% விழுக்காடு முடிவுற்றும் , மேற்கொண்டு கிரயத்தில் 50% விழுக்காடு மனைகள் வீடு கட்டுவதற்காக இப்பேரூராட்சி மூலம் கட்டிட வரைபடம் அனுமதி பெற்ற பின்னரே அடிப்படை வசதிகள் விதி முறைகளை அனுசரித்து மேற்கொள்ளப்படும். (மன்ற தீர்மானத்தின் மூலம் நிர்வாகம் மற்றும் தொழில் நுட்ப அனுமதியின் அடிப்படையில்).

மேற்கண்ட நிபந்தனைகளுடன் நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளை அனுசரித்து கீழ் கையொப்பமிட்ட அலுவலரால் பிறப்பிக்கப்படும் உத்திரவுகளுக்கு கட்டுப்பட்டவர் என்ற முழு நிபந்தனைகள் அடிப்படையில் இவ்வுத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையிலேயே நிபந்தனைக்கு உட்பட்டு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த ஆவணங்களில் வேறு ஏதேனும் வில்லங்கம், விவகாரங்கள் இனி வரும் காலங்களில் ஏற்படின் விண்ணப்பதாரர்கள் தமது சொந்தப் பொறுப்பில் நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும். பேரூராட்சியை எவ்வகையிலும் பொறுப்பாக்க இயலாது. தற்போது பேரூராட்சிக்கு விண்ணப்பதாரர்கள் செலுத்தி உள்ள தொகை போக பிற அபிவிருத்தி கட்டணங்கள் மற்றும் ஏனைய இனங்கள் குறைவு என இனி வரும் காலங்களில் தணிக்கை துறை மற்றும் பேரூராட்சித்துறை ஆய்வின் போது அறிய நேரிடின் ஏற்படும் வித்தியாசத் தொகையினை விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும். நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப் பட்டுள்ளவாறு நன்னிலைவரி உரிய தலைப்பில் அரசுக்கணக்கில் செலுத்தி அதற்கான நகல் இணைக்கப் படவேண்டும். தவறும் பட்சத்தில் அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவு செல்லத்தக்கதல்ல என்று உத்திரவிடும் சமயம் நீதிமன்றத்தில் வழக்கு தாவாவிற்கு உட்படுத்தக் கூடாது எனவும் அவ்வாறு உட்படுத்தும் பட்சத்தில் மனைப்பிரிவுதாரர் நிபந்தனைகளை மீறி உள்ளார் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அனுமதி உத்திரவு ரத்து செயயப் படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

ஷ நிலம் வருவாய் துறையினரின் நில ஆர்ஜித பட்டியலில் இடம் பெற்றுள்ளது என பிற்காலத்தில் தெரிய வந்தால் தற்போது வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு அங்கீகாரம் உடனடியாக இரத்து செய்யப்படும். இதனால் ஏற்படும் இழப்புக்கு விண்ணப்பதாரரே முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.மனைப்பிரிவு அங்கீகாரம் மற்றும் ஆவணங்கள் தொடர்பாக யாதொரு நபர், நபர்கள் அல்லது நிறுவனங்கள் தங்களுக்கு இடம் உரிமையானது என நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தால் நீதி மன்ற வழக்குகளுக்கு உண்டான முழு செலவு தொகையினை விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.இனி வரும் காலங்களில் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க வசூலிக்கப்படும் கட்டணம் தொடர்பாக அரசு முன் தேதியிட்டு உத்திரவு பிறப்பித்தால் அரசினால் நிர்ணயிக்கப்படும் கூடுதல் கட்டணத் தொகையினை விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும். இனி வரும் காலத்தில் அரசு மற்றும் பேரூராட்சி யினரால் பிறப்பிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் , கோவை அவர்களது ந.க. எண் கடிதம் ந.க.எண் CBEREGN/2UPS7QYK/2023/2024/TCP நாள் 12.01.2024 உத்திரவுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இவ்வலுவலக ந.க. எண் 29/2024 ன்படி பிறப்பிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடப்பதாக ரூ.50/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் உறுதி மொழிப் பத்திரம் எழுதி இவ்வலுவலகத்திற்கு 7 நாட்களுக்குள் ஒப்படை செய்யப்பட வேண்டும். ஷ முத்திரைத் தாளில் உறுதி மொழி பத்திரம் எழுதி சமர்ப்பித்த பின்னரே மனைகளை விற்பனை செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் உறுதி மொழி பத்திரம் சமர்ப்பிக்காவிட்டால் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கிய உத்திரவு ரத்து செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது. ரத்து செய்து உத்திரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் வீட்டு மனைகள் விற்பனை செய்யக் கூடாது. மீண்டும் ஆவணங்களுடன் பேரூராட்சிக்கு விண்ணப்பித்து அங்கீகாரம் பெற்று பின்னரே மனைப் பிரிவுகள் விற்பனை செய்ய வேண்டும் என இதன் மூலம் அறிவுறுத்தப் படுகிறது.

மேற்கண்ட செயல்முறை நடவடிக்கையில் கண்ட அனைத்து நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளை மனை கிரயம் பெறும் நபர்களிடம் விளக்கமாகவும், கிரையப் பத்திரத்தில் முழுமையாக தெளிவு படுத்திய பின்னர் மனை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதில் முரண்பாடான கிரயப்பத்திரம் மேற்கொண்டு மனை கிரயம் பெற்றவர் பேரூராட்சிக்கு மனை அங்கீகாரம் வேண்டி விண்ணப்பிக்கும் சமயம் இந்த செயல் முறை நடவடிக்கைகள் தெரிந்து கொண்டேன் என்பதை சான்று மூலம் அளிக்கவும் உத்திரவிடப் படுகிறது.

எனவே, ஷ மனைப்பிரிவு தொடர்பாக நிபந்தனைகள் மற்றும் அங்கீகாரம் சட்ட விதிமுறைகளுக்கும் நிர்வாக அறிவுரைக்கும் உட்படுத்தி அவ்வப்போது பிறப்பிக்கவும், நீக்கவும் கீழ் கையொப்பமிட்ட அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு எனவும் உத்திரவிடப் படுகிறது.

மேலே கண்ட நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு கோவை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் நக. எண் கடிதம் நக.எண் CBEREGN-2UPS7QYK/2023/2024/TCP நாள் 12.01.2024ல் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் 25 மனைகளாக பிரித்து அனுமதி வழங்கியதில் ம.வ/கோ.மா.எண் 06/2024 ன்படி (இணையவழி)ன்படி மகிழம் கார்டன் என்ற பெயரில் 25 எண்ணிக்கை கொண்ட மனையிடங்களுக்கு திருமதி.தாரணி மற்றும் மூவர் என்பவருக்கு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப் படுகிறது.

செயல் அலுவலர்

சூலேஸ்வரன்பட்டி பேரூராட்சி

சூலேஸ்வரன்பட்டி

19/01/2024

பெறுநர்

1. திருமதி.தாரணி மற்றும் மூவர், க..எண்55/33, ரத்தின வினாயகர் கோவில் வீதி, வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி அஞ்சல் கோயம்புத்தூர் மாவட்டம்

நகல்

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாநகராட்சி வணிக வளாகம்., டாக்டர் நஞ்சப்பா சாலை, கோவை -18 அவர்களுக்கு அனுப்பப்படுகிறது
2. சார்பதிவாளர் அவர்கள், சார் பதிவாளர் அலுவலகம், பொள்ளாச்சி



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate